RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s2227716

OPEN ACCESS

# கே.வி. ஷைலஜாவின் சுமித்ரா நாவலில் காணப்படும் இருத்தலியல் கோட்பாடுகள்

ர. சரசு [அ, *]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032., தமிழ்நாடு, இந்தியா

# Existential theories in K.V. Shsilaja's Sumitra Novel

R. Sarasu [a, *]

[a] PG and Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: sarasutamil0806@gmail.com

Received: 13-09-2022
Revised: 15-11-2022
Accepted: 21-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Existentialism is a philosophy or ideology that is not universally understood. We cannot explain that this is existentialism. Human life begins at birth and ends at death. This policy emphasizes the inner consciousness of the individual and evaluates the world and man based on the true experiences of man, unaltered by socially determined moral values. The sufferings of human life such as death, emptiness, guilt, hopelessness, fear, pain and other existential characters can be seen in Kalpata Narayanan's novel Sumitra. The purpose of this article is to explore the existentialist characters.

**Keywords:** Iruththaliyal, Thaaimai, Ragasiyangal, Agaulagam, Punidham

## முன்னுரை

இருத்தலியல் என்பது உலக அளவில் புரிந்து கொள்ளப்படாத தத்துவம் அல்லது சித்தாந்தம். 'இதுதான் இருத்தலியல் என்று விளக்கிக் கூற முடியாது' என்கிறார் க.நா.சுப்பிரமணியம். பிறப்பில் தொடங்கி இறப்பில் முடிவடைகிறது மனித வாழ்க்கை. தனிமனிதனின் அக உணர்வுக்கு முக்கியத்துவம் தருவதாக அமையும் இக்கொள்கையானது சமூகத்தால் தீர்மானிக்கப்பட்ட ஒழுக்க மதிப்புகளுக்கு மாறாத மனிதனின் மெய்மையான அனுபவங்களின் அடிப்படையில் உலகையும் மனிதனையும் மதிப்பிடுவதாக அமைகிறது (Balasubramaniyan, 1993). மனித வாழ்க்கையின் அவலங்களான மரணம், வெறுமை, குற்ற உணர்வு, நம்பிக்கையின்மை, பயம், வேதனை போன்ற இருத்தலியல் பண்புடைய கதாபாத்திரங்கள் கல்பட்டா நாராயணனின் சுமித்ரா என்ற நாவலில் காண முடிகிறது. இருத்தலியல் பண்புடைய அக்கதாபாத்திரங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இருத்தலியல் பற்றி அகராதி கூறுவன

இருத்தலியல் தத்துவத்தைப் பற்றி கொலின்ஸ் ஆங்கில அகராதி பின்வருமாறு குறிப்பிடுகிறது. "போலியான பொருளற்ற பிரபஞ்சத்தில் தனி மனிதன் ஒருவனுடைய சுய அனுபவமும் பொறுப்பும் தான் அவனுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. International Advanced Deluxe Dictionary பின்வருமாறு விளக்கமளிக்கிறது. Exist - வாழ்ந்திடு, அடிப்படைத் தேவைகளைக் உயிர்வாழ். Existence - வாழும் முறை Existentialism - இனம் புரியாத அச்சம், துன்பம் ஆகியவை மனிதன் வாழ்வில் அமைகின்றன (DP, 2016).

ஒருவன் மேற்கொள்ளும் முடிவுகளின் அடிப்படையிலேயே அவனுடைய வாழ்க்கை அமைகிறது என்ற கோட்பாடு" என்று கூறுகிறது.

லிப்கோ அகராதி இருத்தலியல் குறித்துப் பின்வருமாறு விளக்கமளிக்கிறது. Existentinlism - எல்லா அறிவும் மனத்திலிருந்துதான் பிறக்கிறது என்றும், மனத்தின் புறத்திற்கும் அசுத்திற்கும் வேறுபாடு இல்லை என்றும் சாற்றும் கொள்கை" என்கிறது.

"தனிமனிதன் சுதந்திரமும் பொறுப்பும் உடையவன் என்றும், அவற்றைப் பயன்படுத்தி அவன் எடுக்கும் முடிவுகள் அவன் வாழ்க்கை நிலையை நிர்ணயிக்கின்றன என்றும் கூறும் தத்துவம்" என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கூறுகின்றது (Crea, 1992).

"மனிதனது இருத்தலை அவனது இடத்தை, சூழலை, உலகில் அவன் செயற்பாட்டைக் கடவுளோடு, கடவுள் சிந்தனையோடு அவனிக்கிருக்கும் தொடர்பை அல்லது தொடர்பின்மையைக் குறிப்பதே இருத்தலியல்" என்று அறிஞர் காட்டன் (Cuddon) இருத்தலியல் பற்றிக் குறிப்பிடுகிறார்.

## மலையாள மொழிபெயர்ப்பு நூல்-சுமித்ரா

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் உள்ள கல்பட்டாவுக்கு அருகில் 'கோட்டத்தர' எனும் சிறு கிராமத்தில் பிறந்தவர் கல்பட்டா நாராயணன். மூன்று கவிதைத் தொகுப்புகள் இரு இலக்கிய விமர்சன நூல்கள் உட்பட பல நூல்கள் எழுதியுள்ளார்.

இவரது 'இத்ரமாத்திரம்' என்ற நாவலை சுமித்ரா என்று கே.வி.ஷைலஜா அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். கேரளாவைப் பூர்வீகமாகக் கொண்ட ஷைலஜா தமிழ்நாட்டில் திருவண்ணாமலையில் வசிக்கிறார். பாலசந்திரன் சுள்ளிக்காட்டின் சிதம்பர நினைவுகள் மூலம் மொழிப்பெயர்ப்பாளராகத் தமிழுக்கு அறிமுகமானவர். பல மலையாள மொழிபெயர்ப்பு நூல்களைத் தமிழுக்கு தந்தவர். தமிழின் நல்ல இலக்கியங்களைப் பதிப்பிக்கும் முயற்சியில் வம்சி புக்ஸ் என்ற பதிப்பகத்தை நடத்துகிறார்.

## சுமித்ரா - நாவலின் போக்கு

மனிதர்களின் வாழ்க்கை மரணத்துடன் முடிந்துவிடுவதில்லை. மரணம் உடலின் இருப்பைத் தான் முடித்து வைக்கிறது. இறப்பிற்குப் பிறகும் மனிதர்கள் நினைவுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சுமித்ரா இறந்துவிட்டாள். இந்த ஒரு வரி தான் மொத்த நாவல். இந்த ஒற்றை வரிக்குப் பின்னால் ஒரு பெண்ணின் முழு வாழ்க்கை அடங்கியிருக்கிறது. சுமித்ராவின் குடும்பம், கணவர், மகள், அவளது இயல்புலகம், அவளுடன் அன்பைப் பகிர்ந்து கொண்டவர்கள், அவளுடன் பழகிய மனிதர்கள், அவளைப் புரிந்து கொள்ளத் தவறியவர்கள், அவளது மரணத்தின் முன்பாகத் தன்னை உணர்ந்து கொண்டவர்கள், அவள் இருந்த போது அடையாத முக்கியத்துவத்தை மரணத்தின் வழியே அடைவதைக் காண்கிறவர்கள் என பலரது நினைவுகளின் வழியே சுமித்ரா பீறிடத் துவங்குகிறாள்.

நடுத்தர வயதுடைய ஒரு பெண்ணின் மரணம், அவள் குடும்பத்தையும் அவளைச் சார்ந்தோராரையும் எவ்வகையில் துக்கமடைய செய்கிறது என்பதை 'சுமித்ரா' என்கிற இந்நாவல் உணர்த்துகிறது (Sailaja, 2013).

## மரணம் பற்றி மகாபாரதம் கூறுவது

இந்தப் பூவுலகின் மிகப்பெரிய வியப்பு என்ன? என்று யக்ஷன் யுதிஷ்ட்ரனிடம் கேட்கிறான். அதற்கு யுதிஷ்டரான், "ஒவ்வொரு நாளும் மனித வாழ்வு முடிந்து மக்கள் யமனின் கோட்டைக்குள் போய்க் கொண்டே இருக்கிறார்கள். ஆனாலும், இந்தப் பூலோகத்தில் எஞ்சி இருப்பவர்கள் தங்களுக்கொன்றும் நஷ்டமில்லையென்றும், இங்கே நிலையாக நாம் தங்கிவிடுவோம் என்றும்

நினைக்கிறார்கள். இதைவிட வியப்பு என்ன இருக்கிறது!" என்று கூறுகிறான் (Sakkaravarthi Rajagopalasari, 2020).

மகாபாரத்தில் ஆரண்ய பருவத்தில் வரும் இக்கருத்தை முன்வைத்தே சுமித்ராவின் நாவல் தொடக்கம் அமைகிறது. மனிதனின் மரணம் உலகின் கண்களைப் பொறுத்தவரை ஒரு சம்பவம். ஒரு இலை உதிரல். அவ்வளவே என்ற கருத்தை இந்நாவல் நினைவூட்டுகிறது.

## சுமித்ராவின் மரணம்

'ஈயின் ரீங்காரம்' என்ற பகுதியில் சுமித்ராவின் கணவன் வாசுதேவன், அவருடைய வழக்கமான காலை நடைபயிற்சி முடிவதற்குள் காலை உணவு வேலைகளை முடித்து வைக்கும் பழக்கமுள்ள சுமித்ரா இன்று தன் வாழ்வினை முடித்து வைத்திருந்ததைக் கூறுகிறது. வழக்கத்தைவிட அன்று அணைக்கட்டில் மீன்கள் துள்ளி விளையாடுவதை அதிக நேரம் ரசித்துவிட்டு வீடு திரும்புகிறார் வாசுதேவன். "அது அவளுடன் ஒன்றாயிருந்த உலகத்தில் இன்னும் கொஞ்ச நேரம் சேர்ந்து வாழ அவருக்கு வாய்த்தது" இவ்வரிகளில் வாசிப்போரின், மனதை உறைய செய்துவிடுகிறது. 38-வயதுடைய பெண்ணைச் சுற்றி பறந்துக் கொண்டிருக்கும் ஈயின் ரீங்காரம் அவளுக்கு கேட்டிருக்குமா? அவள் மரணம் தந்த அழுகையின் அடர்த்தி குறையத் தொடங்கியது. ஆரம்பத்தில் வலியைத் தரும் ஒருவரின் மரணம், நேரம் செல்ல செல்ல இயல்பான மனநிலையை அடைந்து, அவரவர் வாழ்வைப் பற்றியும் வேலையைப் பற்றியும் நினைக்கத் தொடங்கும் எதார்த்த நிலையை உணர்த்துகிறது (Sailaja, 2013).

## தண்ணீரால் தன் அகத்தைத் தூய்மை செய்துகொள்ளும் சுமித்ரா

எந்த நினைவுகளை விலக்கியும், வெறுத்தும், ஒதுக்கி வைத்தார்களோ அந்த நினைவுகளில் ஒன்றாக அவர்களும் உருமாறிப் போகிறார்கள். கொதித்து ஆவியாகி வான் உயர்ந்து சென்று, பின்பு குளிர்ந்து மழையாகி, உறைந்து பனியாகி, வெயில் கண்டு உருகி மீண்டும் தன் இயல்பிற்குத் தானே திரும்பிவிடுகிறது தண்ணீர். மனிதனின் பிறப்பும் இறப்பும் அப்படித்தான். மனிதனின் பிறப்பும் இறப்பும் தண்ணீரால் தான் நடைபெறுகிறது.

சுமித்ராவின் முதல் குளியலும் கடைசிக்குளியலும் அவளுக்கு நினைவிருக்காது. குளிப்பது சுமித்ராவின் முக்கிய வேலை. அவள் குளிப்பதில் அதிக விருப்பமுள்ள ஸ்திரீயாக இருக்கிறாள். அது வெறும் தண்ணீரோடு உள்ள உறவு மட்டுமில்லை. அவளது மனம் சதா சுத்தமும் வேண்டிக் கொண்டிருக்கிறது. நடப்பு உலகமும் உறவுகளும் அவளைத் தொடர்ந்து மாசுபடுத்திக் கொண்டேயிருக்கிறது. அதை அவள் எதிர்ப்பதில்லை. மாறாக தண்ணீரின் வழியே தன்னைத் தூய்மைபடுத்திவிட முடியும் என்று நம்புகிறாள். ஒரு தாதியைப் போல தண்ணீர் அவளைத் தேற்றுகிறது. தண்ணீரோடு பெண்களுக்கு உள்ள உறவு ஆண்களால் ஒரு போதும் புரிந்து கொள்ளப்பட முடியாதது (Sailaja, 2013).

## சுமித்ராவிடம் தாய்மையை உணர்ந்த புருஷோத்தமன்

'சரண்' என்ற பகுதியில் ஏழு வயதுடைய புருஷோத்தமன் தன் அம்மாவிடம் அல்லாது வேறொரு அன்பின் ருசியைச் சுமித்ராவிடம் உணர்கிறான். புருஷ் அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கின்றனர். அப்போது, அவனைப் பார்த்துக் கொள்கிறாள் சுமித்ரா. அன்றிலிருந்து சுமித்ராவிடம் பாதுகாப்பான உணர்வைப் பெறுகிறான். உனக்கு இரண்டு குழந்தைகளா? எனத் தெரியாதவர்கள் கேட்கும் அளவிற்கு புருஷ் மீது அன்பைப் பொழிவாள். புருஷ் கல்லூரியில் சேர்ந்த போது, நிர்மலாவுடன் ஏற்பட்ட காதலைச் சுமித்ராவிடம் பகிர்ந்துக்கொள்கிறான். அந்தளவிற்குத் தன்னைவிட வயதில் மிகவும் குறைந்தவர்களிடமும் அளவற்ற அன்பைத் தருபவளாகச் சுமித்ரா இருந்திருக்கிறாள். சுமித்ராவின் மரணம், புருஷோத்தமனுக்கு அவன் அப்பா இறந்த நாளை விட அதிக துக்கத்தையும் அழுகையும் தந்தது புருஷோத்தமனுக்கு.

## அண்ணனின் தீச்செயலால் பாதிக்கப்பட்ட கருப்பி

பன்மடங்கு அறிவியல் வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் அடைந்த இக்காலக்கட்டத்திலும் ஏற்றத்தாழ்வுகள் பார்க்கும் மனப்பான்மை மக்களிடம் இருக்கவே செய்கிறது. ஆனால், வயநாட்டில் நாயர் இனத்தில் பிறந்த சுமித்ரா, அங்கிருக்கும் பழங்குடி பெண்களிடமும் மிகுந்த அன்பு காட்டுபவளாக இருக்கிறாள். 'மரணம் அழுத்திச் சொல்கிறது' என்ற பகுதியில் பணிச்சி (ஆதிவாசிகளில் ஒரு பிரிவினர்) பெண்களுக்கும் சுமித்ராவிற்குமான உறவு கூறப்பட்டுள்ளது. பழங்கலத்தின் தூணில் சாய்ந்து நின்று சுமித்ராவும், தடுக்கில் குத்துக் காலிட்டு உட்கார்ந்து கருப்பியும் பல நாட்களைக் கடத்தியிருக்கிறார்கள். பல முறை கருப்பியின் முடியைப் பிரித்து கோதியுள்ளாள் சுமித்ரா. இளம் தம்பிராட்டி என்று சுமித்ராவைக் கருப்பி அன்பாக அழைப்பாள். கருப்பியின் கணவன் கொரம்பி. அதீத போதையிலிருந்த போது, அவனை அடித்து வெளியில் தள்ளிவிட்டு, அவளுடைய மூத்த அண்ணன் கைம, அவளைப் பலாத்காரம் செய்ய முயற்சித்தான். இதைக் கருப்பி சுமித்ராவிடம் பகிர்ந்து கொள்கிறாள். “பொம்பளைங்க நாம என்ன செய்ய முடியும்? இனி அப்படி எதுவும் நடக்க நீ அனுமதிக்காதே” என்று சமாதானம் செய்தாள் சுமித்ரா. பின் வெகுநேரம் தலைகுனிந்து இருவருமே அமைதியாக இருந்தார்கள். பிறர் நிலையை உணரும் சுமித்ராவின் மரணம் கருப்பிற்கு மிகுந்த வேதனையைத் தந்தது.

## இரகசியங்கள் நிறைந்த சுமித்ராவின் தோழிகள்

'சுமித்ராவின் கீதா' என்ற பகுதியில் சுமித்ராவின் பள்ளிப்பருவத் தோழி கீதா வருகிறாள். மரணப்படுக்கையில் கிடந்த சுமித்ராவின் நெற்றியில் மிருதுவாய்த் தடவுகிறாள். அப்போது இருவருக்குமான நெருக்கத்தை நினைக்கிறாள்.

மாதவிலக்கு காலங்களில், இருவரும் வீட்டிற்குத் தூரத்தில் தனியே ஒதுக்கி வைக்கப்பட்ட போது பேசிய ரகசியங்கள் பள்ளிக்குத் தட்டுடுத்தி சென்று போது, அது கீழே விழுந்ததால் ஏற்பட்ட அவமானம் கீதாவின் கணவனது தம்பி அவளைத் தவறாகப் பயன்படுத்தியது இவற்றையெல்லாம் கீதா சுமித்ராவிடம் மட்டுமே பகிர்ந்து கொண்டுள்ளாள்.

“நீ எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தாய். என் கஷ்ட நஷ்டமெல்லாம் உனக்குத்தான் தெரியும். இப்போது நான் இறந்த காலம் இல்லாதவளாளேன்” என்று கூறிக் கலங்கி அழுகிறாள் கீதா.

'யானைக்குட்டி' என்ற பகுதியில் கீதாவைப் போன்றே, சுமித்ராவிற்கு மிக நெருங்கிய தோழியான சுபைதாவின் வாழ்க்கை இரகசியமும், அந்த இரகசியத்தைத் தெரிந்து கொண்ட பின் சுபைதாவிற்கு ஆறுதல் கூறி உற்ற தோழியாக கடைசி வரை இருந்து சென்ற சுமித்ராவின் மரணம் வேதனையைத் தருவதாக உள்ளது (Sailaja, 2013).

## பால் சார்ந்த உணர்வுகளால் உந்தப்பட்ட அப்பு

'பாலபாடங்கள்' என்ற பகுதியில் சுமித்ராவின் தாய்மாமன் மகனான அப்புக்குருப்பைக்கும் அவளுக்குமான சிறுவயது நிகழ்வுகளைக் கூறுகிறது. சுமித்ரா, அப்புவின் வீட்டில் தங்கிப் படித்திருந்தாள். அப்போது, சுமித்ராவிற்குத் தெரியாமல் அவள் குளிக்கும் போதும் ஒப்பனைச் செய்த போதும் மறைந்திருந்து அப்பு இரசித்துள்ளான். இவ்வாறு பதின்ம வயதில் வரும் பால் சார்ந்த சிக்கல்களை அவளால் மேன்மையாகவே எதிர்கொள்ள முடிந்திருக்கிறது. கீழ்மையான எண்ணங்களைக் கொண்டவர்களையும், அவர்களது குறைகளைக் கொண்டு மதிப்பவளாக இல்லாதிருக்கும் சுமித்ராவின் இயல்பை உணர முடிகிறது.

## யாருமறியாத சுமித்ராவின் அகவுலகம்

தஸ்தாயெவ்ஸ்கி நாவலில் வரும் அதீத ஒழுக்க மீறல்களின் தரப்பிலிருந்து வெளிப்படும் உச்சக்கட்ட மனிதத்துவத்தைப் பிரதிபலிப்பதாக சுமித்ரா இருக்கிறாள். கொஞ்சம் தவறினாலும் தவறாக

எண்ணக்கூடிய மெல்லிய பாதையில் சுமித்ராவின் நடத்தை இருக்கிறது. அதீதக் கருணையும் அன்பும் உணர்வு ரீதியாகச் சரியாகச் சென்று பிறரைச் சேர்வது எல்லா நேரத்திலும் சாத்தியமல்ல. அவை சரியாகப் புரிந்துகொள்ள முடியாமலும் போகலாம். இரு மனிதர்களுக்கு இடையேயான உறவை ஒரு திருமண ஒப்பந்தம் போல திட்டவட்டமாக நிர்ணயிக்க முடியாத சூழலில், அதீத அன்பைக் காதலாகவும் ஏக்கமாகவும் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் மிக அதிகமாக இருக்கும் சமூக அமைப்பு இது. ஆனால், சுமித்ரா காட்டும் அன்பும் அக்கறையும் தவறிழைப்பவரையும் மாற்றிவிடும் என்று எண்ண வைக்கிறது.

சுமித்ராவின் தலையை அழுத்தி விடும் பொதுவாளுக்கு அவளது கருணை புரிந்திருக்கிறது. தலைவலி போக்க சுகமாக அழுத்தி பிடித்த பொதுவாளின் கையை எடுத்து உதடுகளில் வைத்து அழுத்தி சுமித்ரா முத்தமிடுகிறாள். இந்நெருக்கத்தை 'எதிர்பார்ப்பின்மை' என்ற பகுதி கூறுகிறது.

ஈரம் மிகுந்த வயநாட்டுப் பகுதியில் வாழும் சுமித்ராவுக்குத் தடைகள் சமூக யதார்த்தத் தளத்தைச் சார்ந்தவை. இதை கல்பட்டா நாராயணன் கதை நெடுக உணர்த்துகிறார். சுமித்ராவின் அகப்போராட்டங்களைப் பார்க்கும் போது பெண்களின் அன்பும் அக்கறையும் காலத்தையும் இடத்தையும் மீறி சென்று எல்லைகளற்ற அந்தரங்க உலகத்தை தன்னுள் கொள்ளும் சக்தி கொண்டதாகத் தெரிகிறது.

## புனிதமான உள்ளமுடைய மாதவி

'புனிதமானவள்' என்ற பகுதியில் சுமித்ரா வீட்டருகே வாழும் தோழி மாதவியின் கதை. வயநாடே பிடிக்காமல் புகுந்த வீட்டிற்கு வந்த மாதவிக்கு, பிற ஆடவர்கள் பார்வைப் பிடிக்கத் தொடங்கியது. ஊரார் மாதவியை ஒதுக்கி வைக்கின்றனர். அவளுடனான சுமித்ராவின் நட்பு வாசுதேவனுக்குப் பிடிக்கவில்லை. சுமித்ரா மாதவியின் அன்பை மட்டுமே நேசித்தாள்.

யாரும் மதிக்காத உன்னை அரவணைக்கிறேன் பார் எனும் பிச்சை போடும்படியாக அல்லாது மிகச் சகஜமாக மாதவியுடன் பழகுகிறாள்.

"இன்னைக்கு யாரெல்லாம் வராங்க?" என்று மாதவியிடம் கேட்டு, நானும் வருகிறேன் இருவரும் பேசிக் கொண்டிருக்கலாம் என்கிறாள் சுமித்ரா.

தனது கல்லூரிக்கால நட்பைப் போலவே சுமித்ராவால் இந்நட்பையும் பேண முயலுகிறது. தேவைக்காகவும் சமூக கட்டாயத்துகாகவும் உருவாகும் நட்பையும் அனிச்சையாக விரும்பி அமையும் நட்பையும் சமமாக பார்க்க முடிகிற மேலானவளாகச் சுமித்ரா இருக்கிறாள்.

'ரகசியம்' என்ற தலைப்பில் வரும் மரியா அக்கா தங்க செயினை சுமித்ராவிடம் கொடுத்து வைத்ததை எண்ணி அல்லல்படுவதை இயல்பான வரிகளால் சைலஜா உணர்த்துகிறார் (Sailaja, 2013).

## சுமித்ராவிற்கு நெருக்கமான இடம்

'பழங்கலம்' இது சுமித்ராவிற்கு மிகவும் நெருக்கமான இடமாகும். "விஸ்தாரமான திண்ணைகளோடு மேற்கு பார்த்த படியிருந்த புளிக்கல் வீட்டின் பழங்கலம்" சுமித்ரா வீட்டிற்குள் இன்னொரு வீடு. பழங்கலம் நெற்குதிருக்கு மட்டுமல்ல அவளது கனவுகள் ரகசியங்கள் ஆசைகளின் சேகரிப்பு கலம். தனித்திருக்க, புத்தகம் படிக்க, நெருங்கிய தோழிகளுடன் மனம் விட்டு பேச உகந்த இடம். மாதவிலக்காகும் மூன்று நாட்களும் அவள்தான் பழங்கலத்தின் ராணி.

## தனக்கேயுரிய தனியுலகத்தில் அனுசூயா

சுமித்ராவின் மகள் அனுசூயா. அவள் அப்பாவைப் போன்றே பயந்த சுபாவம் உடையவள். எதிர்காலத்தைப் பற்றி எவ்வித திட்டமிடலும் எதிலும் ஆர்வமும் இல்லாமல் இருப்பவள். சுமித்ராவின் கவலை எல்லாம் அனுசூயாவைப் பற்றி தான். அனுசூயா வந்தவுடன் பிணம் மீண்டும் சுமித்ராவாக

ஆனது. தன் அம்மாவைத் தனக்கு இவ்வளவு பிடிக்குமென்பதை அனுசூயா அன்றுதான் உணர்ந்து அழுதாள்.

## மரண வீட்டின் எதார்த்த நிலை

'உரையாடல்' எனும் கடைசி பகுதியில் சுமித்ரா சுவாசிக்க முடியாத சகித்துக் கொள்ள முடியாத பார்க்க முடியாத வடிவில் சாம்பலாக மாறிக் கொண்டிருக்கிறாள்.

"மரணத்தின் சந்திப்பில் அதிக நேரம் நிற்பதற்கான திராணி மனிதர்களிடம் குறைந்து கொண்டே வருகிறது. சுமித்ரா தாமதிக்க செய்த காரியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருத்தருக்கும் ஞாபகம் வரத் தொடங்கியது. மரணத்திலிருந்து ஒளிந்து கொள்ளவும் அவர்கள் ஆசைப்பட்டார்கள்" என்பதாக உரையாடல் முடிவுக்கு வருகிறது.

## இருத்தலின் வலியை உணர்த்தும் கல்பட்டாவின் கவித்துவமான வரிகள்

அவளுடன் ஒன்றாயிருந்த உலகத்தில் இன்னும் கொஞ்ச நேரம் சேர்ந்து வாழ அவருக்கு வாய்த்தது. யார் இப்படி அழுவது கவனமாகப் படத்திலிருந்து கவனிக்கும் அப்பாவைப் பார்த்ததும், அவர் இறந்த அன்றைய நாளை விட அதிக துக்கத்துடன் புருஷோத்தமனுக்கு அழுகை வந்தது. காமம் மனசைத் தீண்டியிராத மனிதரின் பக்கத்தில் உட்காரும் போதுள்ள எல்லையில்லாப் பாதுகாப்பைத் தாசனோடு பழகும் போது பெண்கள் உணர்ந்தார்கள். வயதான கோமாளிகளின் கோமாளித்தனம் நடிப்பதற்காக அல்ல அது வாழ்க்கைக்கானது என்பது வேதனையைத் தந்தது. மிருகக்காட்சி சாலைகளோ, சர்க்கசோ எப்போதும் அவரை வேதனைப்படுத்தின. இதற்கும் மேலான அநாதைகளை அவர் எங்கும் பார்த்ததில்லை. அனுசூயா வந்தவுடன் பிணம் மீண்டும் சுமித்ராவாக ஆனது. உடன் அழுவது மேலும் சுலபம், ஒன்றாய் நடந்து மலையேறுவது போல. மலையேறுகிறோம் என்றே தெரியாது. மேற்கண்ட வரிகள் யாவும் கதையில் வரும் கதாபாத்திரங்களின் வலியைக் கவித்துவத்துடன் காட்டுகிறது.

## முடிவுரை

கல்பட்டா நாராயணன் ஒரு கவிஞர். அதிலும் இருத்தலின் வலியை உணர்ந்த சிறந்த கவிஞர். அதனால் தான் நினைவுகளை இவ்வளவு கூர்மையாக, உச்சமாக அவரால் மீட்ட முடிந்திருக்கிறது. இவற்றை சுமித்ராவின் நினைவுகள் என்று தனியே பிரித்துவிட முடியாது. இவை பல பெண்களின் நினைவுகள், ஷைலஜாவின் மொழிபெயர்ப்பு மிக சரளமாக, மூலத்தின் கவித்துவத்திற்கு நிகராக, அதே நேரம் மலையாள எழுத்துக்கே உரிய தனிச்சொற்களுடன் செம்மையாக அமைந்துள்ளது. இந்நாவல் தமிழுக்கு மிகவும் புதியதொரு கதை சொல்லும் முறையை, எழுத்துவகையை, புதிரும் கண்ணீரும் நிரம்பிய பெண்களின் அகவுலகை வெளிப்படுத்துகிறது.

## References

Balasubramaniyan, K.V. (1993) Iruthalithal Kotpadu Tamil Ula Thoguthi 1, Manivasagar Pathippagam, Chennai, India

Crea, (1992) Creavin Tharkala Tamil Agarathi, Crea Pathippagam, Chennai, India

DP, (2016) International Advanced Deluxe Dictionary, Deluxe Publishers, Coimbatore, India

Sailaja, K.V. (2013) Sumithra, Vamsi Books, Thiruvannamalai, India

Sakkaravarthi Rajagopalasari, (2020) Mahabharatham, Vanathi Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License